4. ஒழுங்குப் பிரச்சினை.

அனுமதியின்றி ஓர் உறுப்பினர் பேச முயன்றது குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டரா, சரி.

திரு. ஆர். சிங்காரம் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது குறித்து அந்த டி.எஸ்.பி. இறந்த அன்றே உங்களைச் சந்தித்து நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதன் பிறகு நேற்று மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் கொடுத்திருக்கிறார். அதன் பிறகு நேற்றும் ராமசுப்பு கொடுத்திருக்கிறார். இன்னும் பல உறுப்பினர்களும் கொடுத்திருக்கிறார்கள். நான் அவசியம் பேசி ஆக வேண்டுமென்று உங்களிடத்தில் அன்றிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் அந்த சம்பந்தப்பட்ட தொகுதியைச் சேர்ந்த ராமசுப்பு பேச வேண்டுமென்று நீங்கள் அனுமதித்த காரணத்தால்தான் நானும் அதை விட்டு விட்டேன். அவரும் அதை விட்டு விட்டார். அவர் சம்மதத்தின் பேரிலேதான் பேசச் சொல்லியிருக்கிறார்கள். அதை மீண்டும் இன்னொரு உறுப்பினர் கிளப்புவது என்பது எங்களுடைய மனச்சாட்சியை உறுத்துகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. வினாக்கள்—விடைகள் நேரம் முடிந்தவுடன் ஒரு பிரச்சினையை எழுப்பும் நடைமுறை—தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

திரு. இளம்வழுதி : தலைவரவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களுக்கு முதலிலேயே சொல்லியிருக்கிறேன். நீங்கள் எழுதிக் கொடுத்து விட்டுச் சொல்லுங்கள். அரசின் கவனத்திற்கு நான் கொண்டு போக வேண்டும் அல்லவா? திடீரென்று நீங்கள் எழுப்பக் கூடாது. அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லத் தக்க வகையில் எனக்கு எழுதிக் கொடுத்து விட்டு நீங்கள் அதைப்பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். நீங்கள் என்னுடைய கவனத்திற்குக் கொடுத்து விட்டுச் சொல்ல வேண்டும். அப்படியில்லாமல் ஏதாவது பேப்பரைக் காண்பிப்பது என்ன நியாயம்? என்னுடைய கவனத்திற்கு என்னுடைய அறையிலே வந்து கொடுத்து விட்டு இங்கே கிளப்புவதுதான் முறை. உட்காருங்கள்.